Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி - விளம்பரம்
சேகரிக்க முழு நேர - பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 067 | சனிக்கிழமை Saturday | 06.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## முதலமைச்சர் விஜய் தலைமையில்
# ‘வெற்றி தமிழகம்’ என்ற பெயரில் அமைச்சரவை கூட்டம்



## முக்கிய திட்டங்கள் குறித்து விவாதம்

சென்னை: அமைச்சர்கள் யாரேனும் தவறு செய்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் எச்சரித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் தலைமையில் சென்னை தலைமைச் செயலகத்தில் (ஜூன் 05) காலை ‘கு அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. 'வெற்றி தமிழகம்' என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அனைத்து அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் பட்ஜெட் தாக்கல், ஆளுநர் உரை, தொழில் முதலீடுகள், டாஸ்மாக் விவகாரம், நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை, சட்டமன்றத் தேர்தலில் தவெக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது, வேலைவாய்ப்பு, மகளிர் உரிமைத்தொகை உள்ளிட்டவைக் குறித்து அமைச்சர்களுடன் முதலமைச்சர் விஜய் விரிவாக ஆலோசனை நடத்தியதாகக்கூறப்படுகிறது.

சுமார்ஒருமணிநேரத்திற்கும் மேலாக நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், அமைச்சர்களுக்கு பல்வேறு அறிவுறுத்தல்களை முதலமைச்சர் விஜய் வழங்கினார். "அமைச்சர்கள் மக்களுக்காக உழைக்க வேண்டும்; லஞ்சம் லாவண்யம் கட்டாயம் செய்யக்கூடாது. அவ்வாறு செய்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று முதலமைச்சர் எச்சரிக்கை விடுத்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதில் இளைஞர்கள் மேம்பாடு,முன்னேற்றம், மகளிர் மேம்பாடு, விவசாயிகள் மற்றும் மீனவர்கள் வளர்ச்சி,லஞ்சம் இல்லாத நல்லாட்சி, போதை இல்லாத தமிழகம் என அனைத்துத் துறைகளுக்கும் தொலைநோக்கு திட்டங்களை முதல்வர் வகுத்து கொடுத்துள்ளார்.

தேர்தல் வாக்குறுதியில் கொடுக்கப்பட்டதையும் சேர்த்து, தற்போது 436 திட்டங்கள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டது. குட்கா, போதைப் பொருட்கள் விற்பனையை முற்றிலும் ஒழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேகேதாட்டு அணை கட்டும் விவகாரத்தில்சட்டப்பூர்வநடவடிக்கை எடுக்கப்படும்" இவ்வாறு அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில் நிதி, தொழில்முதலீடு சார்ந்த திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும் பட்ஜெட், கவர்னர் உரை, மேகதாது, டாஸ்மாக், நிதி குறித்த வெள்ளை அறிக்கை,மகளிருக்கான ரூ.2500 குறித்தும் விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக தமிழக அமைச்சரவை கூட்டம் நடைபெற்றதாக கூறப்படுகிறது.

# அதிக மக்களை இணைக்கும் ஒரு புதிய அரசியல் இயக்கம்: அண்ணாமலை அறிவிப்பு



புதுடெல்லி: "அதிக மக்களை இணைக்கும் ஒரு புதிய அரசியல் இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டும் என்பதே தனது மிகப்பெரிய ஆசை" என்று அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

பாஜகவில் இணைந்து அக்கட்சியின் மாநிலத் தலைவராக இருந்த அண்ணாமலை, அக்கட்சியில் இருந்து விலகுவதற்கான ராஜினாமா கடிதத்தை கட்சித் தலைமையிடம் வழங்கி இருந்தார். அவரது ராஜினாமா ஏற்கப்பட்டதாக பாஜக அறிவித்தது.

இந்நிலையில், தனது எதிர்கால திட்டங்கள் குறித்து சமூக ஊடகங்கள் வாயிலாக அவர் பேசினார். அப்போது அண்ணாமலை கூறியது: "நான் 2020, ஆகஸ்ட் 25-ல் பாஜகவில் இணைந்தேன். தமிழக மக்களுக்காக 6 ஆண்டு காலம் பணியாற்றுவதற்கு பெரிய வாய்ப்பு கிடைத்தது. அதை பெரிய பாக்கியமாக கருதுகிறேன்.

என்னுடைய பாதை வேறு; வேறு பாதையில் பயணம் செய்ய வேண்டும்; எனக்கு இலக்குகள் பெரியதாக உள்ளன; நிறைய மக்களை இணைத்து செயல்பட வேண்டும்; ஒரு புதிய அரசியலை, அடிப்படை கட்டமைப்புகளை மாற்றக்கூடிய அரசியலை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு நான் இருக்கிறேன் என்பதை பாஜக தலைவர்களிடம் பண்போடு சொல்லிவிட்டு அந்த இயக்கத்தில் இருந்து வெளியே வந்துள்ளேன். இது தமிழர் பண்பு என்றும்கூட வைத்துக்கொள்ளலாம்.

ஒரு புதிய இயக்கம், ஒரு புதிய அரசியல் இயக்கம், ஒரு புதிய பரிமாணத்தோடு இயங்கக்கூடிய வகையில்தான் நமது இயக்கத்தை தொடங்க வேண்டும்; எல்லோரும் சேர்ந்து, இணைந்து இதை ஆரம்பிக்க வேண்டும் என்பது எனது பெரிய ஆசை.

எனது அரசியல் பாதை எளிதானது அல்ல. வளைந்து, நெளிந்து நான் இங்கு வந்திருக்கிறேன். ஒரு கிராமத்தில் பிறந்து, ஒரு விவசாய குடும்பத்தில் இருந்து வந்தவன் நான். இதுபோன்ற எளிய பின்னணி கொண்ட மனிதர்கள் அரசியலுக்கு வருவதே அரிது. ஏனெனில், நாம் ஒதுங்கிக் கொள்வோம்; வர மாட்டோம். என்னுடைய பாதையும்கூட 2009ல் விஜயகாந்தின் தேமுதிகவில் மூன்று மாத காலம் இருந்து பயிற்சிபெற்று,பின்னர் 10 ஆண்டு காலம் கழித்து பாஜகவில் இணைந்து அங்கு 6 ஆண்டு காலம் பணியாற்றிய நிலையில், தற்போது தனித்துவமான முறையில் நம்முடைய இயக்கத்தை மக்கள் முன் வைக்க வேண்டும் என்பதற்காக நான் உங்கள் முன் நிற்கிறேன்.

நான் காவல்துறை பதவியை விட்டு விலகிய பிறகு எனக்கும் நடிகர் ரஜினிகாந்த்துக்கும் இடையே நட்பு ஏற்பட்டது.

நான் பாஜகவில் இணைவதற்கு ஒரு நாள் முன்பாக நடிகர் ரஜினிகாந்த் என்னிடம் தொலைபேசியில் பேசினார். நான் அவரது இயக்கத்தில் இணைய வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

அப்போது, தமிழ்நாட்டுக்கு எது நல்லது; ரஜினிகாந்துக்கு எது நல்லது; அண்ணாமலைக்கு எது நல்லது என்ற மூன்று விஷயங்கள்தான் என் கண் முன்பாக இருந்தன. ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவது தமிழ்நாட்டுக்கு நல்லது. ஆனால், கோவிட் பெருந்தொற்று காலமாக இருந்ததால் அவர் அரசியலுக்கு வராமல் இருப்பது அவருக்கு நல்லது. நான் பாஜகவில் இணைவதாக பி.எல். சந்தோஷ் அவர்களிடம் வாக்குறுதி கொடுத்திருந்தேன். அதனால் அதை மீறக்கூடாது என நான் கருதினேன்.

இதனால், என்னை மன்னித்துவிடுங்கள்; என்னால் வர முடியாது என்று ரஜினிகாந்த்திடம் கூறிவிட்டு, மறுநாள் பாஜகவில் இணைந்தேன். பிறகு நேரிலும் சந்தித்து மன்னிப்பு கோரினேன். அவரும் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டு தனது முடிவை அவர் எடுத்தார். சில யூகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காகவே இதைச் சொல்கிறேன். வேறு காரணம் இல்லை.

பாஜகவில் நான் இருந்தபோது பல தலைவர்களும் முழு ஒத்துழைப்பு அளித்தார்கள். உள்ளாட்சித் தேர்தலில் பாஜக தனித்துப் போட்டியிட வேண்டும் என்று அப்போது முடிவெடுத்தோம். அதேபோல், மக்களவைத் தேர்தலிலும் தனித்துப் போட்டியிட வேண்டும் என்று முடிவெடுத்து அவ்வாறே போட்டியிட்டோம். எனக்கும் இன்னொரு கட்சிக்குமான தனிப்பட்ட பிரச்சினை அல்ல அது. பாஜக தமிழர் அடையாளத்தோடு இருக்க வேண்டும் என்பதற்காகவேஅப்படி ஒருநிலைப்பாட்டை நாங்கள் எடுத்தோம்.

பிரதமர் மோடி மீது மிகுந்தமரியாதைவைத்திருக்கக்கூடிய மனிதன் நான். இந்த நாட்டை பாதுகாத்துக் கொண்டிருக்கக்கூடிய மனிதர் அவர். ஆனால், பாஜகவில் எனக்கு சின்ன சின்ன பிரச்சினைகள் இருந்து கொண்டே இருந்தன. இது குறித்து கடந்த 18 மாதங்களாக நான் பாஜக தலைவர்களிடம் சொல்லிக்கொண்டே வந்துள்ளேன்.பாஜகவில்இருந்து நான் விலக உள்ளேன் என்பதை கடந்த டிசம்பர் 4ம் தேதியே நான் கூறினேன். இப்போதே உங்களை தயார்படுத்த விரும்புகிறேன் என்பதையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என முடிவெடுக்க விரும்பவில்லை என்றும் அவர்களிடம்கூறினேன். அப்போது தேர்தல் பணியை முடித்துவிட்டு செல்லுமாறு சொன்னார்கள். உண்மைத் தொண்டனாக அதை ஏற்று தேர்தல் பணியை முடித்துவிட்டு மே மாதம் இறுதிவரை நான் எனது பணியை செதுவிட்டுத்தான் வெளியே வந்துள்ளேன்.

அடுத்ததாக, ஆனந்தமாக, அன்போடு தமிழகத்தில் நாம் ஒரு அரசியல் இயக்கத்தை தொடங்க இருக்கிறோம். இது அரசியல் இயக்கமா கட்சியா என்றால், அடுத்து தமிழகத்தில் நடைபெற இருக்கிற பொதுத் தேர்தலில் நமது கட்சி போட்டியிடும். அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. அதற்கு நாம் நிறைய தயாரிப்புப் பணிகளைமேற்கொள்ள வேண்டும். நிறைய தலைவர்களை உருவாக்க வேண்டும். நிறைய நிர்வாகிகளை, தன்னார்வர்களை தயார்படுத்த வேண்டும். அதற்கான திறன்களை நாம் அவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இதற்கு கொஞ்சம் நேரம் ஆகும். நாம் ஒரு இயக்கமாக ஆரம்பித்து நிறைய மனிதர்களை உள்ளே கொண்டு வந்து அவர்களுக்கு அரசியலை சொல்லிக் கொடுத்து, எல்லா தரப்பு மனிதர்களையும் உள்ளே கொண்டு வர வேண்டும்.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

## வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் 17 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு



தமிழகத்தில் கோவை, நீலகிரி, தேனி உள்ளிட்ட 17 மாவட்டங்களில் நாளை (ஜூன் 7) ஒரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: கடலோர கர்நாடகம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் சுமார் 3.1 கிமீ முதல் 4.5 கிமீ உயரம் வரை ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

தென்மேற்கு பருவமழை, தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு அரபிக்கடலின் மீதமுள்ள பகுதிகளிலும், மத்திய மேற்கு மற்றும் மத்திய கிழக்கு அரபிக்கடலின் சில பகுதிகளிலும், லட்சத்தீவு பகுதிகளிலும், கேரளா - கர்நாடகம் மற்றும் தமிழகத்தின் சில பகுதிகளிலும், தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளிலும், மேலும் தென்மேற்கு, மத்திய மேற்கு, மத்திய கிழக்கு மற்றும் வடகிழக்கு வங்கக்கடல் பகுதிகளிலும் முன்னேறியுள்ளது.இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (ஜூன் 6) கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கன முதல் மிகக்கனமழையும்,தென்காசி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் மலைப்பகுதிகள், கன்னியாகுமரி, ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி,திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருப்பூர், மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழையும் பெய்யக்கூடும். 8-ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, திருப்பூர், திண்டுக்கல், தேனி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கன முதல் மிகக்கனமழையும்,தென்காசி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் மலைப்பகுதிகள், ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி,விருதுநகர் மற்றும் மதுரை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி மின்னலுடன் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை (ஜூன் 6) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.நகரின் ஒரிரு பகுதிகளில் இடி, மின்னலுடன் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 102 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும். தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் இன்று மணிக்கு 40 முதல் 60 கி.மீ. வேகத்தில் சூறாவளிக்காற்று வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# ரோஜா பூ கொடுத்து புதிய மாணவர்களை அன்புடன் வரவேற்ற தேவகோட்டை பள்ளி



தேவகோட்டை - சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் உள்ள சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில், கோடை விடுமுறைக்குப் பிறகு பள்ளி திறக்கப்பட்ட முதல் நாளில் புதிதாக சேர்ந்த மாணவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.பள்ளியில் புதியதாக சேர்ந்த மாணவர்களை, மூத்த மாணவர்கள் ரோஜா பூ வழங்கி அன்புடன் வரவேற்றனர். இதனால் மாணவர்கள் மகிழ்ச்சியுடன் பள்ளி வாழ்க்கையைத் தொடங்கினர். இந்நிகழ்ச்சிக்கு பள்ளித் தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் தலைமையேற்றார். ஆசிரியர்கள் ஸ்ரீதர், முத்துலெட்சுமி, முத்துமீனாள் உள்ளிட்டோர் வரவேற்பு நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.மேலும்,ஏராளமான பெற்றோர்களும் நிகழ்வில் கலந்து கொண்டு மாணவர்களை உற்சாகப்படுத்தினர். புதிய மாணவர்களுக்கு இனிமையான மற்றும் நட்புறவான சூழலை உருவாக்கும்நோக்கில்நடைபெற்ற இந்த வரவேற்பு நிகழ்ச்சி அனைவரின் பாராட்டையும் பெற்றது.

## அண்ணாமலை பிறந்தநாளை முன்னிட்டும், அவர் முதல்வராக வேண்டியும்

# அண்ணாமலை நற்பணி மன்றத்தினர் திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் தங்கத்தேர் இழுத்து வழிபாடு நடத்தினர்

தமிழக பாஜகவின் முன்னாள்மாநிலதலைவராக செயல்பட்டவர் அண்ணாமலை பின்னர் னின் முதற்படை வீடான திருப்பரங்குன்றத்தில் அண்ணாமலை நற்பணி மன்றத்தினர் சார்பில் முதல்வராகி விடுவார் அவருடைய அரசியல் இந்த காலகட்டத்திற்கு தேவையானது. எல்லா-



அவர் மாநில பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட எந்த பதவியும் வகிக்காமல் பாஜகவில் தொடர்ந்தார். அண்மையில் அவர் டெல்லி சென்று போது பாஜக மேல் இடத்தில் தனது ராஜினாமா |கடிதத்தை கொடுத்து பாஜகவில் இருந்து விலகி விட்டதாகவும் புதிய கட்சி தொடங்கப் போகிறார் என்ற பரபரப்பான தகவல்கள் அடுத்தடுத்து வந்த வண்ணம் உள்ளன. இந்த நிலையில் அவரது ஆதரவாளர்கள் தமிழக முழுவதும் அவரது பிறந்தநாளை கொண்டாடி பல்வேறு விதமான போஸ்டர்களை ஒட்டி தங்களது ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில் தான் முருக-

தங்க தேர் இழுத்து வழிபாடு நடத்தப்பட்டது. இதில் அண்ணாமலை நீண்ட ஆயுளுடனும் அவர் முதல்வராக வேண்டியும் வழிபாடு நடத்தியதாக தொண்டர்கள் தெரிவித்தனர்.

அண்ணாமலை நற்பணி மன்றமாநிலதலைவர் வேல் கண்ணன் பேசும்போது: அண்ணாமலை தனிக்கட்சி தொடங்கினால் எங்கள் மன்றம் அவருடன் பயணிக்கும். ரசிகர் மன்றம் என்பது ரஜினி கமலுடன் ஒப்பிட முடியாது, ஒரு தலைவர் இப்படித்தான் இருக்கணும் என்ற எல்லாருடைய கற்பனையும் அவர் செயலில் காட்டியவர், விஜயை விட இவருக்கு அதிக வரவேற்பு இருக்கும் கட்சி தொடங்கினால் கண்டிப்பாக ரும் சொல்லுவார்கள் இவர் செய்வார் அதனால் அவர் எங்களுக்கு பிடித்த தலைவர் என்றார்.

இதுகுறித்து தென்னிந்திய பார்வர்ட் பிளாக் கட்சிதலைவர்கேசிதிருமாறன் பேசும்போது: இளைஞர்களுக்கு எழுச்சி நாயகனாக தமிழகம் முழுவதும் மக்கள் மனதில் பதிந்த தலைவனாக அண்ணாமலை திகழ்கிறார். அவர் நீடூடி வாழ வேண்டும் அவரது அரசியல் முன்னேற்றம் அடைய வேண்டும். ஒட்டுமொத்த தமிழ்நாடு மக்களும் எதிர்பார்க்கக் கூடிய தலைவர் அண்ணாமலை நீடூடி வாழ வேண்டும் அதற்காக தங்கத் தேர் இழுத்து வழிபாடு நடத்தினோம் என்றார்.



ஈரோடு மாவட்டத்தில் உள்ள கோபி வட்டம் கூகலூர் கிராமத்தில் அரசு உதவி பெறும் காந்தி கல்வி நிலையம் மேல்நிலைப் பள்ளி செயல்படுகிறது. கோடைவிடுமுறை முடிந்து, 202627 ஆம் கல்வி ஆண்டின் முதல் நாளான (ஜூன்.4) அன்று பள்ளி மாணவ மாணவிகளுக்கு, அரசின் நலத்திட்ட உதவிகள் மூலம் ஆண்டு தோறும் வழங்கப்படும் நோட்டு, புத்தகங்கள், சீருடை மற்றும் காலணிகள் வழங்கப்பட்டது. இதனை ஆர்வத்துடன் பெற்றுக் கொண்ட மாணவர்கள் அரசுக்கு நன்றி தெரிவித்தனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே எடைக்கல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் கிணற்றின் மோட்டார் வயர்களைதிருடிய 4 பேரை எடைக்கல் போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# பசுமாட்டிற்கு மருத்துவம்: வீட்டின் பின்புறம் கஞ்சா செடி வளர்த்த டிராக்டர் ஓட்டுனர் கைது!

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே, பசுமாடுகளின் நோயைக் குணப்படுத்த கஞ்சா செடி வளர்த்ததாக டிராக்டர் ஓட்டுனர் ஒருவரைப் போலீசார் கைது செய்துள்ளனர். அவரிடமிருந்து 32 கஞ்சா செடிகள் பறிமுதல் செய்யப்பட்டன.



கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அடுத்த பாப்பாரப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பெரியதம்பிகொட்டாய் பகுதியை சேர்ந்தவர் ரமேஷ் (வயது 45), டிராக்டர் ஓட்டுனர். இவர் தனது வீட்டில் 5 பசுமாடுகளை வைத்து பராமரித்து வருகிறார். இந்நிலையில், ரமேஷின் வீட்டின் பின்புறம் சட்டவிரோதமாக கஞ்சா செடிகள் வளர்க்கப்பட்டு வருவதாக தருமபுரி போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இத்தகவலின் பேரில் தருமபுரி போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து சோதனை நடத்தினர். அப்போது, குறிப்பிட்ட அந்தப் பகுதி கிருஷ்ணகிரி மாவட்ட எல்லைக்குள் வருவது தெரியவந்தது. இதையடுத்து, அவர்கள் இதுகுறித்து அப்பகுதிக்குட்பட்ட பாரூர் காவல் நிலையத்திற்குத் தகவல் தெரிவித்துவிட்டுச் சென்றனர்.

தகவலறிந்து, பாரூர் காவல் ஆய்வாளர் இளவரசி தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்குச் சென்று தீவிர சோதனை மேற்கொண்டனர். அப்போது ரமேஷின் வீட்டின் பின்புறத்தில் 32 கஞ்சா செடிகள் சட்டவிரோதமாக வளர்க்கப்பட்டு வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, போலீசார் அந்தப் பசுமையான கஞ்சா செடிகளைப் பறிமுதல் செய்ததோடு, ரமேஷையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட ரமேஷிடம் போலீசார் நடத்திய விசாரணையில் அவர் ஒரு விசித்திரமான விளக்கத்தை அளித்துள்ளார். போலீசாரிடம் அவர் கூறுகையில், "இது கஞ்சா செடி என்றே எனக்குத் தெரியாது. எனது பசுமாடுகளுக்கு ஏதேனும் நோய் ஏற்பட்டால், இந்தச் செடியின் இலைகளைக் கசக்கிப் பிழிந்து கொடுத்தால் நோய் குணமாகிவிடுகிறது. அந்த ஒரே காரணத்திற்காகத்தான் இந்தச் செடிகளை நான் வளர்த்துப் பராமரித்து வந்தேன்" என்று தெரிவித்துள்ளார்.

# குடியிருப்பு பகுதியில் டாஸ்மாக் கடை: போச்சம்பள்ளியில் பொதுமக்கள் அதிரடி போராட்டம்!

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி - சந்தூர் சாலையில் அமைந்துள்ள டாஸ்மாக் கடையால் தங்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுவதாகக் கூறி, அப்பகுதிபொதுமக்கள் இன்று டாஸ்மாக் கடை முன்பு திரண்டு திடீர் போராட்டத்தில் ஈடுபட்டதால் அங்கு பரபரப்பு நிலவியது



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி - சந்தூர் சாலையில் கடை எண்: 2968 கொண்ட டாஸ்மாக் மதுபானக் கடை இயங்கி வருகிறது.முற்றிலும் குடியிருப்புப்பகுதியான இங்கு, முக்கிய வியாபார ஸ்தலங்களும் அமைந்துள்ளன. மேலும், இக்கடையின் மிக அருகிலேயே பிரசித்தி பெற்ற ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி கோவிலும், ஒரு தனியார் பல்நோக்கு மருத்துவ மனையும் செயல்பட்டு வருகின்றன.

கடந்த பல ஆண்டுகளாக இந்த டாஸ்மாக் கடையை இங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்று பொதுமக்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்துவந்தநிலையிலும், இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இப்பகுதியில் டாஸ்மாக் கடை அமைந்திருப்பதால், பகல் மற்றும் இரவு நேரங்களில் மதுப்பிரியர்களின் அநாகரிகச் செயல்கள் எல்லை மீறிப் போயுள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அநாகரிகச் செயல்கள்: மது குடிப்பவர்கள் வீடுகளின் வாசல்களிலேயே அமர்ந்து மது அருந்துவதும், அங்கேயே வாந்தி எடுப்பது, சிறுநீர் கழிப்பது மற்றும் போதையில் விழுந்து கிடப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்

பெண்களுக்கு அச்சுறுத்தல்: இதனைத் தட்டிக்கேட்கும் பெண்களை மதுப்பிரியர்கள் அநாகரிகமான வார்த்தைகளால் திட்டுவதும், கேலி கிண்டல் செய்து அச்சுறுத்துவதும் தொடர்கதையாகி உள்ளது. கோவில் அவமதிப்பு: புனிதமான கன்னிகா பரமேஸ்வரி கோவில் வாசலிலேயே மது அருந்துவதும், இரவு நேரங்களில் அங்கு அசுத்தம் செய்வதும் பக்தர்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் கோவிலில் நிம்மதியாகப் பூஜை செய்யக் கூட முடிவதில்லை எனப் பெண்கள் வேதனை தெரிவிக்கின்றனர்

மதுப்பிரியர்களின் இந்த அநாகரிகத் தொல்லைகளைத் தாங்க முடியாமல், கடந்த காலங்களில் இப்பகுதியில் வசித்து வந்த பல குடும்பங்கள் தங்கள் வீடுகளைக் காலி செய்துவிட்டு வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுவிட்டனர்" என அப்பகுதி மக்கள் கண்ணீருடன் தெரிவித்தனர்

தங்களின் நீண்ட நாள் கோரிக்கையான இந்த டாஸ்மாக் கடையை உடனடியாக அப்புறப்படுத்த வலியுறுத்தி, இன்று மதியம் அப்பகுதிப் பெண்கள் மற்றும் பொதுமக்கள் என 50ற்கும் மேற்பட்டோர் டாஸ்மாக் கடை முன்பு திரண்டனர். டாஸ்மாக் கடையை அகற்றிட கோஷங்களை எழுப்பினர்.

பொதுமக்களின் இந்தத் திடீர் போராட்டத்தால் அப்பகுதியில் போக்குவரத்துப் பாதிப்பும், பரபரப்பான சூழலும் நிலவியது. மாவட்ட நிர்வாகமும், டாஸ்மாக் நிர்வாகமும் தலையிட்டு, குடியிருப்பு மற்றும் வழிபாட்டுத் தலத்திற்கு அருகே உள்ள இந்த டாஸ்மாக் கடையை நிரந்தரமாக மூடி, வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும்என்பதே ஒட்டுமொத்தப் பகுதி மக்களின் கோரிக்கையாக உள்ளது.

## தமிழ்நாட்டில் வீடு இல்லாத ஏழை மக்கள் அனைவருக்கும்

# வீடு என்ற திட்டத்தை அமுல்படுத்த முதலமைச்சர் விஜய்க்கு கடிதம்




தமிழ்நாடு நிலமற்றோர், வாடகை வீடுகளில் குடியிருப்போர் வாழ்வுரிமை சங்கம்

தலைவர் வேலுமணி அறிவுறுத்தலின் படி தனபால்

பொது செயலாளர் ரா.தனபால் இந்திய ஜீவ கம்னியூஸ்ட் மாநில பொது செயலாளர்

ஜீ ஏ சுபஹான் ஆகியோர்

தமிழ்நாட்டில் வீடு இல்லாத ஏழை மக்கள் அனைவருக்கும் வீடு என்ற திட்டத்தை கொண்டு வர வேண்டி தமிழக முதல்வர் ஜோசப் விஜய்க்கு கடிதம் அனுப்பி உள்ளனர் .

அந்த கடிதத்தில் தமிழ்நாட்டில் வீடு இல்லாத ஏழை மக்கள் அனைவருக்கும் வீடு என்ற திட்டத்தை கொண்டு வர வேண்டும். சென்ற ஆண்டுகளில் வீட்டுமனைப்பட்டா கேட்டு விண்ணப்பித்த அனைவருக்கும் தங்கள் தலைமையில் உள்ள அரசு இலவசவீடுகள் வழங்கவேண்டும்.எந்தகட்டணமும் இல்லாமல் அடுக்குமாடி குடியிருப்புகளை ஏழை மக்களுக்கு வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு நிலமற்றோர் வாடகை வீடுகளில் குடியிருப்போர் வாழ்வுரிமை சங்க பொதுச் செயலாளர் ரா. தனபால் இந்தியஜீவா கம்யூனிஸ்ட் கட்சி பொது செயலாளர் ஜீ ஏசுபஹான்ஆகியஇருவரும்இணைந்துமுதல்வருக்கு கோரிக்கை கடிதம் அனுப்பியுள்ளனர்.

## நகைக்கடை சுவரைத் துளையிட்டு திருட்டு:

# சாவியை கவனிக்காததால் 2 கிலோ தங்கம் தப்பியது! பர்கூர் அருகே பரபரப்பு




கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அடுத்த வரட்டனப்பள்ளி கிராமத்தில், இன்று அதிகாலை துணிகர நகை திருட்டுச் சம்பவம் ஒன்று அரங்கேறியுள்ளது.

வரட்டனப்பள்ளிகிராமத்தைச்சேர்ந்தசரவணன் (வயது 45) என்பவர், அப்பகுதியில் 'பிரகதீஸ்வரர் ஜுவல்லரி' என்ற பெயரில் நகைக்கடை நடத்தி வருகிறார். இன்று காலை வழக்கம் போல் 10 மணியளவில் சரவணன் கடையைத் திறந்தபோது, கடையின் உள்ளே இருந்த பொருட்கள் சிதறிக்கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

நள்ளிரவில்வந்தமர்மநபர்கள்,நகைக்கடையின் பின்புற பக்கவாட்டுச் சுவரை அதிநவீன டிரில்லிங் இயந்திரம் (துளையிடும் கருவி) உள்ளிட்ட உபகரணங்களைக்கொண்டுதுளையிட்டுஉள்ளே புகுந்துள்ளனர்.உள்ளேசென்றகொள்ளையர்கள், கடையின் வெளிப்புறப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த சுமார் 3 கிலோ எடையுள்ள வெள்ளிப் பொருட்களைத் திருடியுள்ளனர். தொடர்ந்து, அங்கிருந்த இரும்பு லாக்கரை (Iron Locker) உடைத்து, அதில் இருந்த தங்க நகைகளைத் திருட பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால், லாக்கரை அவர்களால் திறக்க முடியவில்லை. சுவாரசியமாக, அந்த லாக்கரின் சாவி கடையின் உள்ளே இருந்த ஆணியில் தான் மாட்டப்பட்டிருந்தது. அதை கொள்ளையர்கள் கவனிக்கத் தவறியதால், லாக்கரில் இருந்த சுமார் 2 கிலோ அளவிலான தங்க நகைகள் அதிர்ஷ்டவசமாக தப்பின. லாக்கரை திறக்க முடியாத விரக்தியில், வெள்ளிப் பொருட்களை மட்டும் மூட்டை கட்டிக்கொண்டு மர்ம நபர்கள் தப்பி ஓடியுள்ளனர். இதுகுறித்து கடையின் உரிமையாளர் சரவணன் பர்கூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் பர்கூர் காவல் ஆய்வாளர் மற்றும் போலீசார் சம்பவஇடத்திற்குவிரைந்துவந்துதீவிரவிசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (SP) தங்கதுரை சம்பவ இடத்திற்கு நேரில் வருகை தந்து, துணிகர திருட்டு நடந்த பகுதியை ஆய்வு செய்து, குற்றவாளிகளை விரைந்துபிடிக்கஉத்தரவிட்டார்.சம்பவஇடத்திற்கு வரவழைக்கப்பட்ட கைரேகை நிபுணர்கள் தடயங்களைச் சேகரித்து வருகின்றனர். மோப்ப நாய் உதவியுடனும் போலீசார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.இச்சம்பவம் அப்பகுதி வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



சுற்றுச்சூழல் அமைச்சரும் திருவாடானை சட்டமன்ற உறுப்பினரும், தென்காசி பொறுப்பு அமைச்சர் ஆக பொறுப்பு ஏற்றுள்ள. Dr. ராஜிவ் அவர்களை தென்காசி மத்திய மாவட்டத்தின் கழகச் செயலாளர் JAS. ராஜ பிரகாஷ் அவர்கள். நேரில் சென்று பூங்கொத்து கொடுத்து பணி சிறக்க வாழ்த்து தெரிவித்தார்.



ஈரோடு மாவட்டம் கொடுமுடி வட்டம் பாசூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளியின் தலைமை ஆசிரியை வ.தேவகியம்மாள் தலைமையில் போதைப்பொருள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக மலையம்பாளையம் காவல் ஆய்வாளர் சு.வினோதினி மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் மு.பாலசுப்பிரமணி ஆகியோர் போதைப்பொருள் பயன்படுத்துவதனால் ஏற்படும் தீமைகள் குறித்து மாணவ, மாணவிகளுக்கு விளக்கம் அளித்தனர். அதனை தொடர்ந்து மாணவ,மாணவிகள் போதைப்பொருள் பயன்படுத்த மாட்டோம் என்று உறுதி ஏற்று கொண்டனர்.



ஈரோடு மாநகர நல அலுவலர் கௌரி சரவணன் நேற்று (05.06.2026) ஈரோடு மாநகராட்சி மண்டலம் 4, வார்டு 41ல் உள்ள வார்டு அலுவலகத்தில் தூய்மைப் பணியாளர்களின் வருகைப் பதிவேட்டை ஆய்வு மேற்கொண்டார்.

## கோயம்புத்தூர் சின்னியம்பாளையம் பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகள் தொடக்க விழா



கோயம்புத்தூர் சின்னியம்பாளையத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் இன்று மாணவர்களின் நலன் கருதி,மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகள் தொடக்க விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. கோவை சின்னியம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளிவளாகத்தில்இன்றுஇந்தத் தொடக்க விழா நடைபெற்றது.

பள்ளியின் உள்கட்டமைப்பு மற்றும் மாணவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட இந்த மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளை, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ராயல்கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிட்டல் தலைவரும், நிர்வாக இயக்குநரும், மற்றும் உயிரின் சுவாசம் அறக்கட்டளையின் நிறுவனருமான Dr. க. மாதேஸ்வரன், M.Ch., அவர்கள் முறைப்படிதொடங்கி வைத்தார்."சுற்றுப்புறத் தூய்மை!! ஆரோக்கிய வாழ்வு!!"என்றஉன்னத நோக்கத்தோடு, பள்ளி மாணவர்களிடையே தூய்மையையும் நல்வாழ்வையும் ஊக்குவிக்கும் வகையில் இந்த வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. இவ்விழாவில்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ராயல்கேர் மருத்துவமனை ஊழியர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## ஈரோடு மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி பள்ளிகள் திறக்கப்படுவதை முன்னிட்டு

# அரச்சலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் அரசின் நலத்திட்டங்களான விலையில்லா பாடப்புத்தகங்கள் பாட குறிப்பேடுகள் மற்றும் சீருடைகளை மாணவ, மாணவியர்களுக்கு வழங்கினார்

ஈரோடு மாவட்டம், அரச்சலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நேற்று (04.06.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி திறக்கப்படுவதை முன்னிட்டு பள்ளிகள் நலத்திட்டங்களான அரசின் பாடப்புத்தகங்கள், பாட விலையில்லா குறிப்பேடுகள் மற்றும் சீருடைகளை மாணவ, மாணவியர்களுக்கு வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும் போது தெரிவித்ததாவது

தமிழ்நாட்டில் கோடை விடுமுறை முடிந்து நேற்று பள்ளிகள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து, பள்ளிக்கல்வித்துறையின் சார்பாக இக்கல்வி ஆண்டுக்கான மாணவர்கள் பங்கு பெறும் போட்டித் தேர்வுகளுக்கு உதவும் வண்ணம் தயாரிக்கப்பட்டகல்வி ஆண்டு காலண்டர் (ACADEMIC CALENDAR) தயாரிக்கப்பட்டுள்ளது.

எட்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான தேசிய வருவாய் வழி மற்றும்திறன் படிப்பு உதவித்தொகை (NMMS) போட்டி தேர்வு, ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கான ஊரகத் திறனாய்வு தேர்வு (TRUST) பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கான முதலமைச்சர் திறன் தேடல் தேர்வு(CMTSE) மற்றும் 11-ஆம் வகுப்பு மாணவர்களுக்கான எழுதக்கூடிய தமிழ் திறனறித் தேர்வு (TTSE) ஆகியவற்றில் மாணவர்கள் சிறந்த தேர்ச்சி விகிதத்தை பெற ஜூன் மாதம் முதலே பயிற்சி அளித்து வாராந்திர தேர்வுகள் மற்றும் மாதாந்திர தேர்வுகள் நடத்தி மாவட்டத்தில் போட்டித் தேர்வுகளில் அதிக அளவில் மாணவர்கள் கலந்து கொண்டு வெற்றி பெறும் விதமாக இந்த அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டம் முழுவதும் 1 முதல் 12 வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், பகுதி நேர அரசு உதவிப்பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் என மொத்தம் 2,64,571 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். தமிழ்நாடு அரசு வழங்கும் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெற்று தங்கள் கல்வி தரத்தினை உயர்த்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் பள்ளி கல்வித்துறையின் சார்பில் தயாரிக்கப்பட்ட பள்ளி வருடாந்திர கால அட்டவணையினை மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் பள்ளி தலைமையாசிரியரிடம் வழங்கினார்.

மேலும் 2026-27 ஆம் ஆண்டிற்கான மாணவ, மாணவியர்களுக்கு அரசின் நலத்திட்டங்களான விலையில்லா பாடப்புத்தகங்கள், பாட குறிப்பேடுகள் மற்றும் சீருடைகள், 950 மாணவ மாணவியர்களுக்கும், விலையில்லா புத்தகங்கள் மற்றும் சீருடைகள் 245 மாணவ மாணவியர்களுக்கு வழங்கினார்.

வட்டார இந்த நிகழ்ச்சியில்மாவட்டமுதன்மை கல்வி அலுவலர் முனைவர். இ.மான்விழி, வி. சுமித்ரா, வளர்ச்சி அலுவலர் தலைமையாசிரியர்வீ.பத்மினி,பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் த.கணபதி உட்பட துறைசார்ந்தஅலுவலர்கள் கலந்துகொண்டனர்.





ஈரோடு மாவட்டத்தில் இரவில் குற்றத்தை தடுக்கும் பொருட்டும் பொதுமக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் பொருட்டும், ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V.கிரண் ஸ்ருதி தலைமையில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், துணை காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் ஆய்வாளர்கள் நடை ரோந்து (Foot Patrol) மேற்கொண்டனர். ஈரோடு மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் நடைபெற்ற இந்த நடை ரோந்து பணியில் அதிக அளவில் காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர் என்பதை ஈரோடு மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

## நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில்

# தளிர்விடும் பாரதம் அறக்கட்டளை சுற்றுச்சூழல் தின விழா

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின்சார்பில்எண்ணங்களின்சங்கமம்திரு. ஜெயபிரகாஷ் அவர்களின் ஆலோசனையின் படி *"உலக சுற்றுச்சூழல் தினம்"* இன்று *"பசுமையை நோக்கி ஒரு அடி"* என்ற கருப்பொருளுடன் கொண்டாடப்பட்டது.

நிகழ்விற்கு *தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் தலைவர் சீனிவாசன்* தலைமை வகித்தார்.

தளிர்விடும் வரதராஜன், மோகன்ராஜ், சமூக சேவகி சித்ராபாபு* ஆகியோர் முன்னிலைவகித்தனர்.

குமாரபாளையம் *பழைய பள்ளிபாளையம் ரோடு, விஜயா தோட்டம் குடியிருப்பு பகுதிகளில்* உள்ளவர்களிடம் *மரக்கன்றுகள் வழங்கப்பட்டு* அவர்களின் இல்லங்கள் அருகில் மரக்கன்று நடப்பட்டது.



சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். *மரக்கன்று நட்டால் மட்டும் போதாது அதற்கு தினந்தோறும் தண்ணீர் ஊற்றி பராமரிக்க வேண்டும். குழந்தைகளிடம் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம், அவசியம்* குறித்து சொல்லி தரவேண்டும் என்று *தளிர்விடும் பாரதம் செயலாளர் பிரபு* விழாவில் கலந்து கொண்டவர்களிடம் எடுத்துரைத்தார்.

நிகழ்வில் *தளிர்விடும் பாரதம் சின்னையன், ஈஸ்வரி, ஆசிரியர் பர்வேஷ் மைதீன், கார்த்திகேயன்,தினேஷ்,எக்ஸல் தனசேகரன், சதா அன்புராஜ்*ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கோவை சிவாஜி காலனி பகுதியில், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக, கலப்பு திருமண நிகழ்ச்சி நடைபெற்றது; இந்து முறைப்படி திருமணம் நடைபெற்றது

கோவை சிவாஜி காலனி பகுதியில், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை மண்டலஅலுவலகம்அமைந்துள்ளது. இக்கட்சியின் மாநில துணை தலைவராக வழக்கறிஞர் புஸ்பாணந்தம் இருந்து வருகின்றார். இவரது தலைமையில் இன்று கலப்பு திருமணம் நடைபெற்றது. புதுக்கோட்டை, அடுத்த சத்தியமங்கலம் பகுதியை சேர்ந்தவர் மோகன் ராஜா 21

வயதான இவர், அதே போல புதுக்கோட்டையை சேர்ந்த வினோதினி என்ற 23 வயது பெண்ணை,கடந்த 4 வருடங்களாக காதலித்து வந்த நிலையில் இருவரும் வேறு வேறு சமூகம் என்பதால் இருவரது வீட்டிலும், இவர்களின் காதலுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.



இந்த நிலையில் இன்று, தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. மணமகன் வீட்டினர் முன்னிலையில், இந்து முறைப்படி, தாலி கட்டி, தனது மனைவியாக வினோதினியை மோகன் ராஜ் ஏற்று கொண்டார். தொடர்ந்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கபட்டது. இந்த நிகழ்வில்,

வழக்கறிஞர் குமாஸ்தாக்கள் திவ்யா, லட்சுமி, செல்வராஜ், இ - சேவை மையம் பொண் முருகன், செல்வபுரம் மீரான் கனி, வைத்தியர் பாலகிருஷ்ணன், கிருஷ்ணமூர்த்தி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.




மதுரை பாண்டி கோவில் அருகில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ மந்திரம் காத்த மகாமுனிஸ்வரர் திருக்கோவில் மகா கும்பாபிஷேகமும் மற்றும் 22 ஆம் ஆண்டு பால்குட உற்சவம் சிறப்பு பூஜை நடைபெற்றது பொதுமக்கள் கோஷம் எழுப்ப மேளதாளங்கள் ஒலிக்க சிவாச்சாரியார் வேதமந்திரங்கள் ஓத புனித நீரானது ஊற்றப்பட்டது தொடர்ந்து அலங்காரம் செய்து சிறப்பு பூஜை நடைபெற்றது இந்த கும்பாபிஷேக ஏற்பாட்டினை மதுரை மாவட்ட ஆன்மீக மக்கள் உரிமைகள் பாதுகாப்புக் கழக அணி தலைவர் வாசியோகி பொன் மணிகண்டன் பாண்டி கோவில் பூசாரி பரம்பரை பாண்டி கோவில் அறங்காவலர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார் இதில் தொழிலதிபர் ஐஸ்வர்யா கிரானைட்ஸ் பி.கே.எம் செல்வம், பாண்டி கோவில் அரவிந்தன்,ரிஷி மூவிஸ் அன்னதானம் சரோஜா கருப்பையா, பாண்டி கோவில் சாட் &சாய் பேக்கரி, தவெக வடக்கு சட்டமன்ற உறுப்பினர் விஜய் அன்பன் கல்லாணை, புத்தி சிகாமணி தொழிலதிபர்கள் குமரன், சேகர், பிரதீப் ,சீமான் வீ.எஸ் பாண்டியராஜன் ,செந்தில் வாண்டையார் ,சேகர் கலைச்செல்வி, செந்தில், மற்றும் பொதுமக்கள் ஏராளமான கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர் மேலும் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது

# எல்ஜி எக்யூப்மென்ட்ஸ் நிறுவனம், தனது அதிநவீன ஏர் கம்ப்ரசர், தீர்வுகளை இன்டெக் 2026 கண்காட்சியில் காட்சிப்படுத்தியுள்ளது கண்காட்சி பார்வையாளர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது




உலகின் முன்னணி காற்றழுத்தக் கம்ப்ரசர் உற்பத்தியாளர்களில் ஒன்றாக உள்ள, எல்ஜி எக்யுப்மென்ட்ஸ் நிறுவனம்,கோவை கொடிசியா வர்த்தகக் கண்காட்சி வளாகத்தில் நடைபெறும் 21வது இன்டெக் - சர்வதேச இயந்திரக் கருவிகள் மற்றும் தொழில்துறை வர்த்தகக் கண்காட்சியில் தனது சமீபத்திய கம்ப்ரசர்டு ஏர் டெக்னாலஜிஸ் அன்ட் சொல்யூஷன்ஸை, காட்சிப்படுத்தியுள்ளது. ஜூன் 4ம் தேதி முதல் 8ம் தேதி, வரை நடைபெறும் இந்தக் கண்காட்சியில் சுமார், 70,000–க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கண்காட்சிக்கு பிளாட்டினம் ஸ்பான்சராக இருக்கும் எல்ஜி எக்யுப்மென்ட்ஸ் நிறுவனம், தொழில்துறை பயன்பாடுகளில் அதிக செயல்திறன், நம்பகத்தன்மை மற்றும் ஆற்றல் சேமிப்பை வழங்கும் விரிவான கம்ப்ரெஸ்ட்டு ஏர் அமைப்புகள் மற்றும் துணை உபகரணங்களை காட்சிப்படுத்தியுள்ளது. மேலும் இது குறித்து எல்ஜி எக்யுப்மென்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் டாக்டர் ஜெய்ராம் வரதராஜ் கூறியதாவது,இன்டெக் 2026 கண்காட்சியில் எங்கள் நிறுவனம் காட்சிப்படுத்தும் தயாரிப்புகள், வாடிக்கையாளர்கள் தங்களது உற்பத்தித்திறனைமேம்படுத்துவதோடு ஆற்றல் பயன்பாடு மற்றும் மொத்த இயக்கச் செலவையும் குறைக்க உதவும் கம்ப்ரெஸ்ட்டு ஏர் தீர்வுகளை உருவாக்குவதில் எங்களின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றன. தொழில்துறைகள் அதிக ஆற்றல் திறன், தொழில்துறையில் முன்னணி நம்பகத்தன்மை மற்றும் குறைந்த பராமரிப்பு ஆகியவற்றில் அதிககவனம் செலுத்தி வரும் நிலையில், வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகள் சாதன செயல்திறனைத்தாண்டி, அளவிடக்கூடிய வணிகப்பலன்களை வழங்கும் தீர்வுகளை நோக்கி மாறியுள்ளதாக தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# Phone calls, prayers, and a Kalighat meeting: Mamata fights to keep TMC hers



*Trinamool Congress founder Mamata Banerjee has launched a personal outreach to rebel and wavering legislators, and summoned a meeting at her Kalighat residence in Kolkata for today, in an effort to halt further defections and hold together a party confronting the first split in its 28–year history.*

*Hit by an implosion after the BJP ended her 15–year–rule in Bengal, Mamata Banerjee, 71, has over the past two days telephoned several MLAs from Howrah, Murshidabad and North Dinajpur, party sources told news agency PTI. Many of them were seen at meetings of the rebel camp led by expelled legislator Ritabrata Banerjee,The Ritabrata camp seized control of the TMC's legislature party on Wednesday after 58 of the party's 80 MLAs backed his installation as Leader of the Opposition, a claim accepted by assembly speaker Rathindra Bose.*

*"She is speaking to legislators individually and asking them to attend a meeting at Kalighat on Friday. The effort is to keep communication channels open and explore the possibility of reconciliation," a senior TMC leader told PTI.The meeting is widely seen as a test of Banerjee's continuing hold over legislators who have crossed over, with attendance figures the key indicator.*

*The bleed she is trying to stem extends well beyond the assembly. More than 100 municipal councillors have resigned from the party, along with leaders including former transport minister Snehasish Chakraborty, who quit on Wednesday. The outreach is not confined to the assembly either.*



ஈரோடு மாவட்டத்தில் உள்ள கொடுமுடி பிலிக்கல்பாளையம் இடையே காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்க, சங்கத்தின் தொடர் முயற்சியாக மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி எம்எல்ஏ சண்முகனிடம் நேரில் மனு அளிக்கப்பட்டது. இதன்படி கோரிக்கை மனுவை பெற்ற எம்எல்ஏ அவசியம் செய்து தருவதாக கூறிய நிலையில், சங்கம் மற்றும் பொதுமக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

# தேசிய அளவிலான கிக் பாக்சிங் போட்டியில் 20 தங்கம் உட்பட 39 பதக்கங்களை வென்று அசத்திய ஆண்ட்லீ ப்ளோக் பெல்ட் அகாடமி மாணவர்கள்

## அகாடமி நிறுவனர் மற்றும் தலைமை பயிற்சியாளர் ஆண்ட்லீக்கு ஆளுயர மாலை அணிவித்து பொதுமக்கள் பாராட்டு தெரிவித்தனர்



சென்னையில் நடைபெற்ற தேசிய அளவிலான கிக்பாக்சிங்போட்டியில் கோவை என். ஜி . ஜி . ஓ . கா ல னி ஆண்ட்லிப்ளொக்பெல்ட் அகாடமி மாணவர்கள் 39 பதங்கங்கள் வென்று அசத்தியுள்ளனர்..

ஐ.எஸ்.கே.ஏ.சர்வதேச கராத்தே விளையாட்டு சங்கம் சார்பாக தேசிய அளவிலான கிக் பாக்ஸிங் சாம்பியன்ஷிப் போட்டி, சென்னையில் கடந்த மே 28 ஆம் தேதி தொடங்கி நான்கு நாட்கள் நடைபெற்றது.

இப்போட்டியில்,அரியானா,உத்தரபிரதேசம் , மத்திய பிரதேசம்,மகாராஷ்டிரா,கேரளா,கர்நாடாகா,தமிழ்நாடு போன்ற பல்வேறு மாநிலங்களை சேர்ந்த மாணவர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர்கலந்துகொண்டனர்.

இதில் ,தமிழ்நாடு அணி சார்பாக கோவையில் இருந்து துடியலூர் ஆண்ட்லிப்ளோக்பெல்ட் அகாடமியில் பயிற்சி பெற்ற 16 அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள் தலைமை பயிற்சியாளர் ஆண்ட்லீ தலைமையில் பங்குபெற்றனர்..

ஃபார்ம்ஸ்,பாய்ண்ட் ஸ்பேரிங்,லைட் கான்டேக்ட்,லோ கிக் என பல்வேறு பிரிவுகளில் நடைபெற்ற இதில், கலந்து கொண்ட 16 மாணவர்களும் 20 தங்கப் பதக்கங்கள் மற்றும் 9 வெள்ளி 10 வெண்கலம் என மொத்தம் 39 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

இந்நிலையில் , போட்டியில் வெற்றி பெற்று திரும்பிய மாணவர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு மேள தாளம் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது..

இதில் பெற்றோர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் இணைந்துதலைமை பயிற்சியாளர் ஆண்ட்லீ மற்றும் வெற்றி பதக்கங்களுடன் கோவை திரும்பிய மாணவர்களுக்கு மாலைஅணிவித்து ஊர்வலமாக அழைத்து வந்தனர்..

இதே போல மாணவர்களுக்கு சிறப்பாக பயிற்சி அளித்த பயிற்சியாளர்கள்,அபிஷேக்,சிங்கத்தமிழன்,டேவிட் ஆகியோருக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது..

இது குறித்து ஆண்ட்லி பிளோக்பெல்ட் அகாடமி நிறுவனர் மற்றும் தலைமை பயிற்சியாளர் ஆனந்த் கூறுகையில்,தமிழக மாணவர்கள் கிக் பாக்சிங் போட்டியில் தொடர்ந்து தேசிய சர்வதேச அளவில் சாதனை படைத்து வருவதாகவும்,தற்போது புதிய அரசில் விளையாட்டு துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள ஆதவ் அர்ஜுனா கிக் பாக்சிங் போட்டியில் தனி கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்தார்

# தமிழக சட்டப்பேரவை கூட்டத் தொடர் ஜூன் 18ல் தொடக்கம்



சென்னை: தமிழக சட்டப்பேரவை கூட்டத் தொடர்வரும் ஜூன் 18–ம் தேதி ஆளுநர் உரையுடன் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று முதல்வர் விஜய் தலைமையிலான கூட்டணி ஆட்சி நடந்துவரும் நிலையில், இதுவரை 3 முறை அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில், தலைமைச் செயலகத்தில் முதல்வர் விஜய் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. சட்டப்பேரவைசெயலாளர்வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், 'தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கூட்டம், 2026–ஆம் ஆண்டு,ஜூன் 18–ம்நாள், சென்னை தலைமைச் செயலகத்திலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் கூடும். அச்சமயம் தமிழ்நாடு ஆளுநர் உரை நிகழ்த்த உள்ளார்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வராக விஜய் பொறுப்பேற்ற பின்னர் நடைபெறும் முதல் கூட்டத்தொடர் இதுவாகும். 2026–27–ம் நிதியாண்டுக்கான புதிய அரசின் முழுமையான பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அச்சிறுப்பாக்கம் அருகே

# திடீரென வார சந்தையில் ஆய்வு மேற்கொண்ட காவல் ஆய்வாளர் தன்ராஜ்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள எலப்பாக்கம் ஊராட்சியில் வாரந்தோறும் வியாழக்கிழமை அன்று நடைபெறும் வார சந்தை நடைபெறுவது வழக்கம் இதில் எலப்பாக்கம் சுற்றுவட்டார பகுதியில் உள்ள விவசாயிகள் தாங்கள் விளைவித்த காய்கறிகளை சந்தைப்பகுதியில் தங்களின் விலை நிலத்தில் விதைத்த காய்கறிகளை விற்பது வழக்கம் இதனை அடுத்து வியாழக்கிழமை இன்று பொதுமக்கள் தாங்கள் விளைவித்த காய்கறிகளை சந்தையில் விற்பனை செய்து வருகின்றனர் இதனை அடுத்து புதிதாக பொறுப்பேற்றுள்ள தமிழக வெற்றி கழகம் அரசின் விவசாயிகள் யாரும் பாதிக்கப்படகூடாது என அறிவித்ததிலின் அடிப்படையில் செங்கல்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி அய்மன் ஜமால் இ,கா,ப அவர்களின் உத்தரவின் பேரில் அச்சிறுப்பாக்கம் காவல் ஆய்வாளர் தன்ராஜ் ஆய்வு மேற்கொண்டு வியபாரிகளின் குறைகளை கேட்டு சென்றார்



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அருகே உலக சுற்றுச்சூழல் தினத்தை யொட்டி உத்தமநல்லூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்தில் தமிழ்நாடு இயற்கை சுற்றுச்சூழல் சார்பில் பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது. தமிழ்நாடு இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் சார்பில் மாநில தலைவர் ஜி.முனுசாமி தலைமையில் பள்ளி மாணவர்களுடன் இணைந்து பள்ளி வளாகத்தில் மரக்கன்று நடும் விழா நடைபெற்றது. அதனை தொடர்ந்து பள்ளி மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கினார். அப்போது மாநில துணை செயலாளர் முனுசாமி, மாவட்ட செயலாளர் தனசேகரன், ஒன்றிய தலைவர் விஜய் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.